[11th September 1959

SRI K. SATTANATHA KARAYALAR : சபாநாயகர் அவர்களே, இவ்விதம் அதிகமான அளவில் வழக்குகள் தள்ளப்பட்டிருப்பதற்கு காரணம் "விட்னஸ் டாம்பர்" செய்யப்பட்டது தான் என்று தெரிய வருகிறது. இவ்விதம் டாம்பர் செய்யப்பட்ட விட்னஸ்களின் மீது ஏதாவது வழக்குகள் தொடரப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால் இவ்விதம் 'விட்னஸ் டாம்பர்' செய்வதாக இருந்தால் நிரந்திரமாக அவர்கள் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு சர்க்கார் ஏதாவது உத்தரவு பிறப்பிக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 'டாம்பர்' செய்யப்படுவதுதான் இதற்கு முக்கியமான காரணம் என்று நான் சொல்லவில்லை. நான்கு காரணங்களில் ஒன்று என்றுதான் குறிப்பிட்டேன். வழக்குகள் எவ்வாறு அமைந்திருக்கிறதோ அதற்குத் தகுந்தவாறு தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். இவ்விதம் எத்தனை வழக்குகள் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு இப்போது என்னிடம் தகவலில்லை.

SRI K. ANBAZHAGAN : போலீஸ் இலாகாவினுல் போடப்படும் கேஸ்களில் போடப்படுகிற சாட்சிகள் இயற்கையாக இல்லாமல் வேண்டுமென்று ஜோடிக்கப்பட்ட சாட்சிகளாக இருப்பதினுல்தான் இவ்விதம் வழக்குகள் உண்மையானவையாக இருந்தால்கூட நீதி மன்றத்தின் முன்னுல் வரும்போது தள்ளப்பட்டு விடுகின்றன. அவ்விதமில்லாமல் உண்மையான சாட்சிகளை போட்டு வழக்குகளை நடத்துவதற்கு அரசாங்கம் தக்க முயற்சி எடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எல்லா வழக்குகளும் தள்ளப்பட்டிருக்கின்றன என்று சொல்லிவிட முடியாது. 1,60,911 கேஸ்களில் 14,218 கேஸ்கள்தான் தள்ளப்பட்டிருக்கின்றன. இதற்கு நான்கு விதமான காரணங்களை சொன்னேன். சாட்சிகள் சரியல்ல என்று தள்ளப்பட்ட கேஸ்கள் கொஞ்சம் தான்.

Political sufferers

* 305 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to grant scholarships to posthumous children of political sufferers and to give them appointments;

(b) if so, the details thereof; and

(c) whether any amount of grant has been promised by the Centre for granting scholarships to such children of political sufferers?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) & (b) Government have sanctioned the grant of full-fee concession to all children of political sufferers, including posthumous children, in all educational institutions, including collegiate and technical institutions subject to the usual income limits. Political sufferers and members

11th September 1959] [The Hon. Sri C. Subramaniam]

of their families, including posthumous children, are also eligible for appointment to posts sanctioned for the implementation of the Community Development and Khadi Development Schemes for which appointment is made by direct recruitment by exempting them, if necessary from the provisions of the rules, if any, regarding age, educational qualifications, etc., if they are otherwise considered suitable.

(*c*) The Central Government have stated that they will meet 50 per cent of the expenditure on account of grant of scholarships to children of political sufferers. The matter is under consideration of the Government.

SRI N. K. PALANISAMI : எத்தனை பேர்களுக்கு இதுவரையில் இந்தச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தப் புள்ளி விவரம் என்னிடம் இல்லை.

SRI V. SUBBIAH : அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளம் கொடுப்பதற்காக சென்ற வருஷம் வழங்கப்பட்ட பணத்தைப் பொறுத்தவரையில், எத்தனை பேர்களுக்கு இது கொடுக்கப்படவில்லை? அவர்கள் அரசியல் தியாகிகள் பரம்பரையினர் என்று கருதி அவர்களுக்கு இதைக் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM : யாருக்காவது, அவர்கள் விண்ணப்பித்துக்கொண்டிருந்தபோதிலும் பணம் கொடுக்கப்படாமல் இருந்தால், அதுபற்றி சர்க்காருக்கு தகவல் கொடுக்கப்படுமானால், அதைப் பரிசீலிக்க முடியும்.

SRI N. K. PALANISAMI : அரசியல் தியாகிகள் என்றால், ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும்தான் இந்தச் சலுகை அளிக்கப்படுகிறதா, அல்லது எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு இது அளிக்கப்படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கேள்வி இப்போது எத்தனாவது தடவையாகப் போடப்படுகிறது என்று சொல்வதற்கு எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. இப்போது அவர்கள் எந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்பதைப்பற்றிக் கவலை இல்லை.

Araniyar Project

* 306 *Q.*—SRI A. A. RASHEED AND SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether any settlement was arrived at with regard to the cost of Araniyar Project with the Andhra Government; and

(*b*) if so, the terms of settlement arrived at?